காங்கிரசோடு போட்டியிட சக்திவாய்ந்த எதிர்கட்சி இல்லையாம்!

Phone No 4502

அரை அணா

Regd. No. M. 5458

இலங்கை 5 சதம்

மாலை மணி

ஆசிரியர்: C. N. அண்ணாதுரை M.A.

MALAI MANI

(திராவிடர் தமிழ்த் தினசரி - கருத்திதழ்)

மலர் 1] சென்னை (20—6—50) வெளியூர் (21—6—50) [இதழ் 283

சோஷலிஸ்டுக் கட்சியும் திறமையற்றதாம்

கஷ்டங்கள் இருப்பினும் காங்கிரசுக்கே ஓட்டளிப்பார்களாம் மக்கள்

முதலாளிகளும், வியாபாரிகளும் காங்கிரசையே ஆதரிப்பார்கள்

இந்தியாவின் நிலைகண்டு பிரிட்டிஷ் பத்திரிகையின் கும்மாளம்

அமெரிக்கா, பிரிட்டன் ஆகிய நாடுகளுக்கு, இந்தியா நல்ல தோர் மார்க்கெட்டாக மாறிவருகிறது என்று, நாம் அடிக்கடி கூறிவருகிறோம். அதற்கேற்ப இந்திய சர்க்காரும், இந்த பெருநாட்டு முதலாளிகளுடன் உறவாடுகின்றனர். 'இந்தியாவில் காங்கிரஸ் ஆட்சி உள்ளவரை நமக்குக் குறைவில்லை' என்ற எண்ணத்தோடு, பிரிட்டிஷ் முதலாளித்தவம் காங்கிரஸ் ஆட்சிக்கு தம்மாலியன்ற ஆதரவை அளித்துவருகிறது. பிரிட்டிஷ் பத்திரிகையான "சண்டே டைம்ஸ்" பத்திரிகையில் வெளிவந்திருக்கும் செய்தி கீழே தரப்பட்டுள்ளது. காங்கிரஸ் பதவியிலிருப்பது கண்டு அந்த பிரிட்டிஷ் பத்திரிகை பரவசமடைகிறது. அது மட்டுமல்ல. மேலும் காங்கிரஸ் ஆட்சியை நீடிக்கவேண்டு மென்று விரும்புகிறது—நம்புகிறது. அந்த நம்பிக்கையின் காரணமாக, காங்கிரசுக்கு எதிர்கட்சிகளாக உள்ள கட்சிகளனைத்தையும் கையாலாகாதவை என்று எள்ளி நகையாடுகிறது. அந்தப்பத்திரிகையின் கும்மாளத்தைச் சற்றுக் கவனியுங்கள்:—

லண்டன், ஜூன் 19—

"அதிக வரிகள், விலைவாசிகளின் உயர்வு இவை இருந்த போதிலும், அடுத்த ஆண்டு இந்தியப் பொதுத் தேர்தலில் நடுத்தர வகுப்பினர், வியாபார சமூகத்தினர் இவர்கள் வோட்டுகள் எல்லாம் காங்கிரசுக்கே கிடைக்கும் என்று, ஸண்டே டைம்ஸ் பத்திரிகையில் அதன் இந்திய நிருபர் எழுதியிருக்கிறார்.

அவர் மேலும் எழுதியிருப்பதாவது:—சர்க்காருக்கும், காங்கிரஸுக்கும் தக்கபடியான எதிர்கட்சி இல்லை. முன்பு சீனாவை இந்தியாவுடன் ஒப்பிடுவதுபோல, இனி ஒப்பிட முடியாது.

இந்தியாவில் நூற்றாண்டுகளாக அமைதியுடன் கூடிய அபிவிருத்தி இருந்து வருகிறது. இந்தியாவில யுத்தவெறியர் யாரும இல்லை. ராணுவம் விஸ்வாசத்துடன் நடந்துகொள்கிறது. அத்துடன், பூரண திறமையும் பெற்றிருக்கிறது. நிலச் சுவான்முறை ஒடுக்கப்பட்டு, உழுபவனுக்கே நிலம் என்றமுறை அமுலுக்குக் கொண்டுவரப்படுகிறது. ராஜியங்களை மத்திய சர்க்கார் தன் கட்டுப்பாட்டிற்குள் வைத்திருக்கிறது, சர்க்காருக்கெதிராக கூட தீர்ப்பு கூறுமபடி!

நீதி வற்புறுத்தினால், 'அத்தகைய' தீர்ப்பை வெளியிட கோர்ட்டுகள் தயங்குவதில்லை.

பண்டித நேரு அயல்நாட்டின் உதவியை எதிர்பார்த்து நிற்கவில்லை. கம்யூனிஸ்டு ஆபத்து ஏற்படலாம என்று சொல்லலாமேயொழிய, இப்போது இல்லை.

சோஷலிஸ்டுகளிடையே பொதுமக்கள் மதிப்பைபெறத் தகுதி கூடிய பல தலைவர்கள் இல்லை. கட்சி நிர்வாகமும் போதாது மைனாரிட்டிகளுக்கு அளிக்கப்படும பாதுகாப்புகளைப்பற்றி எதிர்ப்பதிலேயே இந்து மகாசபை காலம்கடத்திவருகிறது. ஆகவே, காங்கிரசை எதிர்த்து போட்டியிட தகுந்தபலமுள்ள எதிர் கட்சியில்லை. ஆகவே, மக்கள் காங்கிரசுக்குதான் வோட்டுபோடுவார்கள்."

இவைதான், அந்த பிரிட்டிஷ் பத்திரிகை வெளியிடும கருத்துக்கள்.

"காங்கிரசுக்கு எதிர் கட்சியில்லை."

"இந்தியாவை சீனாவோடு ஒப்பிட முடியாது."

"மாற்றுக் கட்சிகள் கையாலாகாதவை."

இவைதான் சண்டே டைம்ஸ் வெளியிடும் விஷக்கருத்துக்கள். இதில், ஓரளவுக்குக் குறும்புத்தனமும், ஏமாற்று வித்தையும் கலந்திருக்கின்றன. சந்தடிசாக்கிலே "பண்டித நேரு அயல் நாட்டு உதவியைநாடவில்லை" என்றும் கூறுகிறது. இப்படிக் கூறுவதால், மிதமூர்க்கருவை முதலாளித்துவத்திடமிருந்து பிரித்துக்காட்டப் பார்க்கிறது போலும்! இடையிலே, நிலச்சுவான்தார் முறை ஒடுக்கப்பட்டிருப்பதையும சுட்டிக்காட்டி, இடதுசாரி கருத்துடையாரையும் ஏமாற்ற பார்க்கிறது. ஆனால், இவற்றால் இந்திய ஆட்சியாளரின் முதலாளித்துவப் போக்கினை மறைத்து வைக்க முடியாது. மக்கள் உண்மையை உணரும் காலம், வெகு விரைவில் வரப்போகிறது என்பது மட்டும் உறுதி.

பஸிபிக் பிரதேச பாதுகாப்பு திட்டம்

மெல்போன், ஜூன் 19—

ஆஸ்திரேலியா மந்திரியுடன், பிரிட்டிஷ் சேனாதிபதி ஸ்லிம் சந்தித்துப் பேசியதின் விளைவாக, பஸிபிக் பிரதேச பாதுகாப்பு விஷயமாக விவாதிக்கப்பட்டிருப்பதாக தெரிய வருகிறது.

காமன்வெல்த்—அமெரிக்கக் கூட்டு நடவடிக்கை திட்டம் பற்றியும் ஆலோசிக்கப்பட்டதாகத் தெரிகிறது எல்லா நாடுகளும் ஒரே மாதிரியான ஆயுதங்களை உபயோகிக்கும் திட்டத்தை ராணுவத்தினர்கள் ஒப்புக்கொண்டிருக்கின்றனர். ஆஸ்திரேலியா, அட்லாண்டிக் ஒப்பந்த நாடுகளுடன் அதிகாரிகள் மாற்றிக்கொள்வது சாத்யமானதே.

மெல்போர்ன் பேச்சுவார்த்தைகளில் அமெரிக்கா கலந்துகொள்ளாவிட்டாலும் வாஷிங்டனுக்கு அவ்வப்போது தகவல்கள் அறிவிக்கப்பட்டு வருகிறது.

மிரட்டல் போரைத் தவிர்க்க யு. எஸ். இராணுவம் தேவையாம்

—(0)—

மக் ஆர்தர் கருத்து

லண்டன், ஜூன். 19—

இப்பொழுது இருந்துவரும் மிரட்டல் போர் நிற்கும்வரை, ஜப்பானில் யுனைடெட் ஸ்டேட்ஸ் துருப்புகள் இருந்து வரவேண்டும் என்றும், இப்பொழுதுள்ள அளவைக் குறைக்கவும் கூடாது என்றும் மக்ஆர்தர் கருதுகிறதாக தெரிகிறது. டோகியோவில் அடுத்த வாரம் பாதுகாப்பு விஷயமாகவும், உடன்படிக்கை விஷயமாகவும் ஒரு முக்கிய மாநாடு நடைபெறவிருக்கிற தென்றும், அதில் மக்ஆர்தர் இந்த யோசனையை வெளியிடுவார் என்று தெரிய வருவதாக குளோப்'நிருபர் அறிவிக்கிறார்.

இம்மாநாட்டில் யு. எஸ். பாதுகாப்பு மந்திரி லூயிஜான்ஸன், ஜான்பாஸ்டர் டல்லஸ், ஜெனரல் பிராட்லி முதலியவர்கள் கலந்துகொள்ளவிருக்கிறார்கள்.

டிரிக்வெல்லி முயற்சி பயனற்றுப்போகலாம்

—(0)—

நியூயார்க்கில் மூவர் மாநாடு கூட்ட யோசனை

வாஷிங்டன், ஜூன். 19—

ஐ. நா. காரியதரிசி டிரிக்வெல்லி, தன்சமாதான தூதில் முயற்சித்த நான்கு வல்லரசுகளின் கூட்டம் நடக்கும் எனத் தோன்றவில்லை என்று, இங்குள்ள வட்டாரங்களில் கூறப்படுகிறது.

ஆகஸ்ட் மாதத்தில், நியூயார்க்கில் மூவல்லரசு கூட்டத்தை நடத்தத் திட்டம் போடப்பட்டுவருவதாகக் கூறப்படுகிறது என்று, யுனைடெட் ஸ்டேட்ஸ் அதிகாரி ஒருவர் கூறுகிறார்.

ஜெர்மனியிலுள்ள யுத்தப் போக்கு நிலைமையை தீர்த்துக் கட்டுவது, ஜப்பானிய சமாதான உடன்படிக்கை விஷயமாக முடிவு செய்வது குறித்து மூவர் மாநாட்டில் விவாதிக்கப்படுமாம்.

இப்பொழுது லண்டன் ஆஸ்பத்திரியில் சிகிச்சை பெற்றுவரும் பெவின், குணமடைந்து வெளிவர இன்னும் 3 வாரம் பிடிக்குமாம்.

உல்லாசப் பிரயாணிகளுக்கு "வழி காட்டி"

—(0)—

புத்தகம் வெளியிட சென்னை சர்க்கார் யோசனை

சென்னை, ஜூன். 19—

சென்னை மாகாணத்தில் உல்லாசப்பிரயாணம் செய்யும் அயல் நாட்டினருக்கும், இந்தியருக்கும் உதவும்படியான 'வழிகாட்டி' புத்தகம் ஒன்றை வெளியிட, சென்னை சர்க்கார் உத்தேசித்திருக்கின்றனர்.

இப்புத்தகத்தில், சென்னை மாகாணத்திலுள்ள சரித்திர முக்யத்துவம் பெற்ற இடங்கள், க்ஷேத்திரங்கள், நீராடும் ஸ்தலங்கள், ஆரோக்ய ஸ்தலங்கள் முதலியவை பற்றிய தகவல்கள், இவைகளைப் பற்றிய படங்கள், வண்டிகள் கிடைக்கும் தகவல்கள், தங்குமிடங்களின் விவரம் முதலியவை அடங்கியிருக்கும்.

அந்தந்த ஜில்லாக்களிலுள்ள எல்லா க்ஷேத்திரம், சரித்திரப் பிரசித்திப் பெற்ற இடங்கள் பற்றியும், அவை சம்பந்தப்பட்ட தகவல்களையும் அனுப்பும்படி ஜில்லா கலெக்டர்களை சென்னை சர்க்கார் கேட்டுக்கொண்டிருக்கின்றனர்.

லண்டனில் ஜெர்மன் தூதர்

லண்டன், ஜூன் 19—

யுத்தத்திற்குப்பின் முதல் தடவையாக ஜெர்மன் தூதுவர் டாக்டர் ஹான்ஸ் ஸ்லாங் ஹேனின்ஜன் லண்டன் வந்து சேர்ந்திருக்கிறார். இவர் வெஸ்ட் எண்ட் ஹோட்டலில் தன் காரியாலயம் ஏற்படும் வரை தங்கியிருப்பார்.

இவர் கூறுகையில், தான் ரிப்பன் டிராபபோல இருக்க விரும்பவில்லை என்றும், அவர் எப்படி நடந்துகொண்டாரோ அதற்கு நேர் எதிரிடையாக நடந்துகொள்ளப்போவதாகவும், கூறினார்.

பிரிட்டிஷ் மக்களுக்கும் ஜெர்மன் மக்களுக்குமிடையே நம்பிக்கை ஏற்படுத்தவே, தான் முயற்சி செய்யப்போவதாகவும், அத்தகைய நம்பிக்கை ஏற்பட்டால்தான் ஐரோப்பாவில் சமாதானம் நிலவும் என்றும் அவர் கூறினார்.

டிட்டோ டிரீஸ்டேயைக் கைவிடார்

பெல்கிரேட், ஜூன் 19—

யூகோவிடமுள்ள டிரீஸ்டேயை, ஒரு அங்குலம் கூட டிட்டோ விட்டுவிட மாட்டார் என்று, யூகோ சர்க்கார் அதிகாரி ஒருவர் கூறினார்.

முழு டிரீஸ்டே பிரச்னையை பற்றி இதாலியுடன் சமரசம் பேச, டிட்டோ தயார் என்றும் அவர் கூறினார்.

மாலை மணி

சென்னை 20—6—50 செவ்வாய்க்கிழமை

பண்டிதர் உபதேசம்

"எந்த அயல் நாட்டிலாவது இந்திய வியாபாரிகளுக்கும், மற்ற வியாபாரிகளுக்கும் பட்சபாதம் இருக்குமானால் அத்தகைய பட்சபாதம் நீங்குவதற்கு இந்தியா உதவி செய்யும். இதைத்தவிர அயல்நாட்டு இந்தியருக்குப் பொருளாதாரத் துறையில் உதவி அளிக்க முடியவில்லை. அயல்நாடுகளிலுள்ள இந்தியர் 'தன்கையே தனக்குதவி' என்ற முறையில் நடந்துகொள்ள வேண்டும். சமத்துவ நடத்தை இல்லாத நாட்டிற்கு இந்தியர் போவதை இந்தியா விரும்பவில்லை"

இது, இந்தியப் பிரதமர் பண்டிதநேரு, அண்மையில் சிங்கப்பூரில் நிருபர்கள் மாநாட்டில் பேசியபோது, திருவாய் மலர்ந்தருளிய திருக்கருத்துக்கள்!

"அயல்நாட்டு இந்தியருக்கு பொருளாதாரத் துறையில் இந்தியா என்ன உதவி அளிக்கக் கூடும்?" என ஒரு நிருபர் கேட்ட கேள்விக்குப் பண்டிதர் அளித்த பதில்தான், மேலே எடுத்துக்காட்டப்பட்டிருப்பது,

இந்திய வியாபாரிகட்கும், மற்ற வியாபாரிகட்கும் இடையே பட்சபாதம் ஏற்படாமல் பார்த்துக் கொள்ளுமாம் இந்திய சர்க்கார்; என்னே விந்தை! அயல்நாட்டு இந்தியர் என்ற பட்டியலில் அடங்குவோரிற்பெரும்பாலோர் ஏழைத் தொழிலாளரே; அவரெல்லாம் நிதிதிரட்டி கோடீஸ்வரர்களாக வேண்டும் என்ற எண்ணத்தோடு, தாயகத்தை விட்டுச் சென்றவர்களல்லர். "இங்குதான் வாழ்வில்லையே, அங்கு சென்றேனும் வாழ வழிதேடுவோம்" என்ற எண்ணத்தோடு, ஏக்கத்தைத் துணையாகக் கொண்டு மரக்கலம் ஏறிய மக்கள் அவர்கள். அப்படிப்பட்டவர்கள் நிலை இன்னும் எவ்விதத்திலும் உயர்ந்தபாடில்லை. தேயிலைத் தோட்டங்களும், ரப்பர் தோட்டங்களும் அந்த மக்களுடைய இரத்தத்தை உறிஞ்சும் அட்டைகளாக இருக்கின்றன, இது மட்டுமின்றி இனவெறியும், நிறவெறியும் தமது கோரப் பற்களைக் காட்டி, ஆங்காங்கே இந்தியரைப் பயமுறுத்திக் கொண்டிருக்கின்றன. இந்நிலையிலே விடுதலைப் பெற்றத் தமது தாயகத்தை நோக்கி "ஏ! இந்திய நாடே, நீ என்று தான் எங்கள் வேதனையைத் தீர்க்கப் போகின்றனையோ!" என்று, அவர்களின் வாய் கேட்காவிடினும் அவர்களின் உள்ளம் கேட்கிறது

இப்படிக் கேட்கும் வேதனை உள்ளங்களுக்குப் பதில் கூற வேண்டிய பதவியிலுள்ள பண்டிதநேரு, வேதனை என்பதையே அறியாத வர்த்தக உலகத்தோடு மாத்திரம் பேசுகிறார், 'உங்களுக்கிடையே பட்சபாதம் ஏற்படாமல் பட்சபாதம் கொள்ளுகிறேன்' என்று இது தான் அயல்நாட்டு இந்தியருக்கு இந்தியா அளிக்கவல்ல உதவி என்றும், இதைவிட வேறு வழியில்லை என்றும் அழகாகக் கூறுகிறார். சிறுபான்மையோராகத் திகழும் வர்த்தகரின் நிலை கண்ணுக்குத் தெரிகிற அளவுக்கு வாட்டமுறும் தொழிலாளர் நிலை அவரது கண்களுக்குத் தெரியவில்லை. அவர்களுடைய வாட்டத்தைத் தீர்க்கவல்ல பொருளாதாரத் திட்டத்தைப்பற்றிப் பேச அவருக்கு நா எழவில்லை.

ஆனால், அதே நேரத்தில் உள்நாட்டில், அதாவது இந்தியாவில் பொருளாதார நிலையைச் சீர்படுத்துவதே முதல் நோக்கம் என்கிறார். சரி அயல்நாட்டு இந்தியர் வாழ்வு அவல வாழ்வாக இருப்பினும், உள்நாட்டிலாவது உருப்படியான பயன் காண முடியுமா என்று பார்த்தால், இந்திய சர்க்கார் போடும் திட்டங்கள் எல்லாம், முதலாளித்வத் திட்டங்களாகவும், மேலும் மேலும் டாட்டாக்களையும், பிர்லாக்களையும் உற்பத்திச் செய்யக்கூடிய திட்டங்களாகத்தானிருக்கின்றனவேயன்றி தொழிலாளரை வாழவைக்கும் திட்டங்களாக இருக்கக்காணோம்.

இங்ஙனம், இவ்விந்திய உபகண்டத்தைச் சேர்ந்த மக்கள் தமது தாயகத்திலும் வாழ முடியாமல் கடல் கடந்து சென்றும் அவலம் தீராமல் அவதிப்படுகின்ற வேளையில் தான், இந்தியப் பிரதமர் பாரெங்கும் பவனி வருகிறார்; ஆசியாவின் 'அற்புத சக்திகளை, யெல்லாம் அயலாருக்கு எடுத்தோதுகிறார்; காலனி ஆட்சியைக் கடிந்து பேசுகிறார்; 'சமத்துவ நோக்கமில்லாத நாடுகளுக்கு இந்தியர் போவதை இந்தியா விரும்பவில்லை' என்று அமுத மொழி பேசுகிறார்.

இந்திய உபகண்டத்தில் தென்னாட்டை வடவர் சுரண்டுகின்றனர். இந்தச் சுரண்டலைச் சுட்டிக் காட்டுவோர் தேசத் துரோகிகளாகக் கருதப்படுகின்றனர். இந்நிலையை மாற்றியமைத்து, இங்கு பொருளாதார சமத்துவத்தை ஏற்படுத்த முடியவில்லை ஆட்சியாளரால் இப்படிப்பட்ட நிலையிலேதான் ஊருக்கு உபதேசம் செய்து வருகிறார் பண்டித நேரு—இந்தியாவின் பிரதமர் என்ற முறையிலே. அதிகமாகக் கேட்கப்போனால் 'தன்கையே தனக்குதவி' என்ற பழமொழியைச்சுட்டிக்காட்டுகிறார் அயல்நாட்டு இந்திய மக்களுக்கு.

இதுதானா கடல் கடந்த இந்திய மக்கள் பண்டிதரிடம் எதிர்பார்க்கும் பதில்? பண்டிதர் பக்குவமான பதிலை அல்லவா தந்திருக்க வேண்டும் அவர்களுக்கு.

"கவலைப்படாதீர்கள்; விரைவில் இந்தியா சமதர்ம நாடாகப்போகிறது. அதிலே, உங்களுக்கும் பங்குண்டு. நீங்கள் வீணே வேதனைபடவேண்டாம், வெளிநாட்டாராய் வாழ வேண்டாம்; விரைவில் உங்கள் தாயகத்துக்கே வந்துவிடலாம்" என்றல்லவா கூறியிருக்கவேண்டும்?

சரி, போனது போகட்டும், இனியேனும் உள்நாட்டிலும், அயல்நாட்டிலும் வர்த்தகர் வாழ்வே பெரிதெனக்கொள்ளாமல், தொழிலாளர் நிலையினை உயர்த்துவதில் பண்டிதரும், அவர் தம் ஆட்சி மன்றமும் முனையவேண்டும்; அதுவே பயனுள்ள பணியாகும்.

மறைந்துகிடக்கும் அனுபவ அறிவு

பயன்படுத்த சர்க்கார் யோசனைகள்

திட்டக் கமிஷன் வேண்டுகோள்

சென்னை, ஜூன் 17—

"வெளிப்படுத்தப் படாத அறிவு, அனுபவம், திறமை, சக்தி ஆகியவையும், இதர சாதனங்களும் பெரும் அளவில் இருப்பதாகத் தெரிய வருகிறது. இவற்றைத் தேசிய ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்த முடியும்", என்று தேசிய திட்ட வகுப்புக் கமிஷன், "பொதுஜன ஒத்துழைப்பைப் பெறுவதற்கான நடவடிக்கைகள்" என்ற தலைப்பில் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கையில் கூறுகிறது.

இவ்விஷயம் பற்றித் தங்கள் யோசனைகளைக் கூறி உதவுமாறு, இந்தியாவில் உள்ள பிரபலஸ்தர்களைக் கமிஷனின் உபதலைவரான தோழர் குல்ஜரிலால் நந்தா கேட்டுக்கொண்டிருக்கிறார்.

அறிக்கை மேலும் கூறுவதாவது: ஒவ்வொரு துறையிலும் இன்னும் அநேக காரியங்கள் செய்யப்படாமல் இருக்கின்றன. நாம் செய்ய வேண்டிய வேலைகளையும், செய்துகொண்டிருக்கும் வேலைகளையும் கவனித்தால் இனிச் செய்யவேண்டிய வேலைகளின் அபரிமிதமான அளவு புலனாகும். தொழிலிலும், இதர துறைகளிலும் ஈடுபட்டிருப்பவர்களின் இன்றைய நிலையே நிரந்தரமானதென்று கருதவேண்டியதில்லை அதை மாற்றிவிட முடியும். சர்க்காரில் உள்ளவர்களும் சர்க்காரிடம் இருக்கும் சாதனங்களும் இந்த வேலைகளைச் செய்யப் போதுமானவையாக இல்லை.

ஆனால் மற்றொரு புறத்தில் வெளிப்படுத்தப்படாத அறிவும், அனுபவமும், திறமையும், சக்தியும் இதர சாதனங்களும் குவிந்து கிடப்பதாகத் தெரியவருகிறது. இவற்றை ஆக்க வேலைகளுக்குப் பயன்படுத்த முடியும் சந்தர்ப்பம் அளித்தால், தேச சேவைக்கு உதவத் தயாராக இருப்பதாக, அநேக இளைஞர்கள் கூறுகிறார்கள். இவர்களை இனி செய்ய வேண்டியிருக்கும் காரியங்களில் ஈடுபடுத்தமுடியாதா? அப்படி முடியுமானால், அவ்வளவுக்கும் சமூகத்துக்கு நல்லது.

கழகத் தோழர்களே! கிளைக் கழகங்களே!

கட்டிட நிதிக்கு

தேவை ரூ. 10,000

கிடைத்திருப்பது 3,000

இடைவெளியை

காணிக்கையால் இணையுங்கள்

ராஜ்கோட் நகரசுத்தியாளர் வேலை நிறுத்தம்

600 பேர் வேலையினின்று நீக்கப்பட்டனர்

ராஜ்கோட், ஜூன் 18—

ராஜ்கோட் முனிஸிபாலிடியில் வேலை நிறுத்தம் செய்த நகரசுத்தியாளர் 600 பேரையும் டிஸ்மிஸ் செய்வதென முனிஸிபல் போர்டு நேற்று முடிவு செய்தது.

சரியானபடி நோட்டீஸ் கொடுக்காமல், சென்ற வியாழக்கிழமை முதல் அவர்கள் வேலை நிறுத்தம் செய்துள்ளனர் நேற்று நடுபகலுக்குள் வேலைக்குத் திரும்ப வேண்டுமென அவர்கட்கு முனிஸிபல் போர்டு இறுதி எச்சரிக்கை விடுத்தது. சர்க்கார் நியமித்த விசாரணைக் கமிட்டி சிபார்சு செய்துள்ள 55 ரூபாய் சம்பளம் தருமாறு அவர்கள் கோருகின்றனர். தற்போது 3[illegible] ரூபாய் கொடுக்கப்படுகிறது. விசாரணைக் கமிட்டி சிபாரிசுபடி ஜூலை முதல் சம்பளம் தர முனிஸிபல் தலைவர் இணங்கியிருக்கிறாராம்.

கிரேக்க கடற்படையுடன் பிரிட்டிஷ் ஒத்திகை

லண்டன், ஜூன் 19—

கிரேக்க கடற்படையுடன் மத்தியதரைக் கடலில் ஒத்திகை நடத்துவதற்காக, ஒரு பிரிட்டிஷ் கடற்படை யூனிட் சார்பிழு துறைமுகத்திற்கு வந்து சேர்ந்திருக்கிறது.

இந்தியாவில் பல்வைத்தியத் தொழில்

லண்டன், ஜூன் 19—

அடுத்தமாதம் நடைபெறவிருக்கும் இரண்டு சர்வதேசப் பல் வைத்ய மாநாட்டில், கலந்துகொள்ள, பம்பாயைச் சேர்ந்த டாக்டர் தோழர் நவால்டோர்ஜியும், டாக்டர் புஷாரியும் இங்குவந்துசேர்ந்திருக்கின்றனர்.

இந்தியா, பல் வைத்தியத்தை மிகவும் திறமைபெற்றவர்கள் நடத்தும் தொழிலென்று கருதி, அதைப் பாதுகாக்க சட்டம் செய்திருப்பதை இவர்கள் இம் மாநாடுகளில் வெளிப்படுத்துவர்.

பல் வைத்தியத் தொழில், இந்தியாவில் நன்கு நிலை பெற்றுவிட்டது என்றும், அவர் கூறினார். 5 வருடங்களாக சேவைசெய்துவரும் அகில இந்திய பல் வைத்திய சங்கத்தை அவர் பாராட்டினார்.

மாற்றுக் கட்சிகள் மாநாடு

தோழர் ஜெயப்பிரகாஷ் முயற்சி

பூனா, ஜூன் 18—

பம்பாயில ஜூலை 1-ந் தேதியும், 2-ந் தேதியும் தோழர் ஜெயபிரகாஷ்நாராயண் ஏற்பாடுபேரில் நடைபெறவிருக்கும் எதிர்க்கட்சிகள் மாநாட்டில், அகில இந்திய பாட்டாளிகள் குடியானவர் கட்சியின் ஐந்து பிரதிநிதிகள் கலந்துகொள்வர்.

பம்பாயிலுள்ள அமெரிக்க ஸ்தானிகர் மிஸ்டர் டபிள்யு ஜே. வெய்வி கட்சிப் பிரதிநிதிகளுருவரையும் சந்தித்து, உறவு ஒளிவின்றி மனம் விட்டு கட்சியின் கொள்கைகள், லட்சியம் பற்றி விவாதித்தார். அமெரிக்க ஸ்தானிகர் விவாதித்ததுகட்சி முன்னேற்றம் விஷயத்தில், அன்னார் காட்டும் சிரத்தையை குறிப்பதாகுமென கட்சி வட்டாரங்களில் கருதப்பட்டது.

பாதங்களுக்குப் பயிற்சி வேண்டுமாம்

லண்டன், ஜூன் 19—

நவீன நாகரிக வாழ்வு ஏற்பட்டதால், கால்களுக்கு அதிக சமம் கொடுக்கப்பட்டு, அதன் நிலைமை மோசமானதாக ஆகிவிட்டது என்று, ஒரு பிரபல லண்டன் டாக்டர் அபிப்பிராயப்படுகிறார். இந்தியர்களின் பழக்க வழக்கங்களைக் கடைபிடித்தால், கால்களுக்கு எவ்வித கோளாறும் ஏற்படாது என்றும் அவர் கூறுகிறார்.

கண்ணிகள் உள்ள கடல்கள்

பகிஷ்கரிக்க அயல்நாட்டினர் யோசனை

ஹாங்காங், ஜூன் 19—

ஹாங்காங்-ஸ்வாடோ கடலில் போடப்பட்டுள்ள கண்ணிகள் அகற்றப்பட்டாலன்றி, தங்கள் கப்பல்களை அக்கடலிலிருந்து வாபஸ்பெற்றுவிடுவது பற்றி பிரிட்டனும், இதர அயல்நாடுகளும் யோசித்து வருவதாகத் தெரிகிறது.

தி. மு. கழகச் சொற்பொழிவுகள்

21 - 6 - 50

பட்டுக்கோட்டை :—சி. என். அண்ணாத்துரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத், என். எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம்

22 - 6 - 50

தஞ்சை :— சி. என். அண்ணாத்துரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத், என். எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம்

23 - 6 - 50

சீர்காழி :—சி. என். அண்ணாத்துரை, பெத்தாம்பாளையம் பழனிச்சாமி, ஈ. வி. கே. சம்பத், என். எஸ். இளங்கோ, கே. கே. நீலமேகம்

ரீடாவின் கணவர்கள் சந்திப்பு

லண்டன், ஜூன் 19—

பிரபல நடிகை ரீடாஹேவொர்த்தின் மாஜி கணவர் ஆர்ஸன்வெல்ஸை, இப்போதுள்ள கணவர் அலிகான் இளவரசர் சந்தித்ததாக தெரிகிறது. பாரிஸ் விருந்தின் போது ஏற்பட்ட இச்சந்திப்பில், இருவரும் அத்யந்த நண்பர்களாகிவிட்டனராம்.

ரிவெரியா அரண்மனையில் சில காலம் வந்து தங்கியிருக்கும்படி ஆர்ஸன்வெல்ஸை அலிகான் அழைத்திருக்கிறாராம். ரீடாவுக்கும் ஆர்ஸன் வெல்ஸுக்கும் பிறந்த 'பெக்கா' என்ற பெயருள்ள ...வியும் தன் தகப்பனுடன் வந்து தங்கியிருப்பா...த் தெரிகிறது.

பாவ்டே பிரான்ஸுக்கு வருகிறார்

பாரிஸ், ஜூன் 19—

வியட்னும் பொம்மை அதிபர் பாவ்டே, தன் பிரதமர் டிரான்வான் ஹூன்னுடன் விமான மூலம் பாரிசுக்கு புறப்படுவார் என்றும், அவர் ஒரு மாத காலம் இங்கு தங்கியிருப்பார் என்றும் தெரிகிறது.

பா என்ற இடத்தில் ஜூன் 27-ந் தேதி ஆரம்பமாகும். பிரான்ஸ், வியட்னும், லாவஸ் கம்போடியா இவைகளின் பிரதிநிதிகள்கொண்ட மாநாட்டில் இவர் கலந்துகொள்வார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

பெரும் தீ விபத்து

கன்னிராசபுரம், ஜூன் 18—

முதுகுளத்தூர் தாலுகா, கன்னிராசபுரத்தில் 14-ந்தேதி மாலை, ஒரு கூரை வீட்டில் திடீரென்று தீப்பிடித்துக்கொண்டது. கிராமவாசிகள் தீயை அணைக்க எவ்வளவோ முயன்றும் முடியவில்லை. அன்று அடித்த பலத்த சுழல் காற்றினால், சுமார் 50 வீடுகள் வரை, தீக்கிரையாயின.

இதனால் சுமார் ரூ. (15,000) பதினைந்தாயிரம் பெருமான சொத்துக்களுக்கு நஷ்டம் ஏற்பட்டிருக்கிறது. சுமார் 300 ஜனங்களுக்கு உண்ண உணவும், இருக்க வீடுமின்றி பரிதவிக்கும்படியான நிலையும் ஏற்பட்டிருக்கிறது. பாதிக்கப்பட்ட மக்களுக்கு உடனடியாக உதவி கிடைக்கும்படி தந்தி மூலம், ஜில்லா கலெக்டர் அவர்களுக்குத் தெரிவிக்கப்பட்டிருக்கிறது.

புரட்சிக் கவிஞர் மணிவிழா செயற்குழு அமைப்புக் கூட்டம்

மதுரை, ஜூன் 16—

புரட்சிக்கவிஞர்பாரதிதாசன் அவர்களது அறுபதாம்ஆண்டு 1951-ம் ஆண்டு ஏப்ரல் திங்கள் 29-ம் நாள் நிறைவுபெறுவதால் அந்நாளைப் 'புரட்சிக் கவிஞர் மணிவிழா'' நாளாகக் கொண்டாட எண்ணியுள்ளோம். மணிவிழாவைத்தமிழ் நாட்டிலுள்ள தமிழன்பர்கள் அனைவருடைய ஒத்துழைப்பின் பேரில் மிகச் சீரும் சிறப்பும் பொருந்த நிறைவேற்றி வைக்கப் பெரிதும் விரும்பி, அதற்கான ஆக்கப்பணிகளை இப்பொழுதிருந்தே தொடர்ந்து செய்யவேண்டி மணிவிழா செயற்குழு ஒன்று அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். அமைப்புக்கூட்டத்தை 24—6—50 சனியன்று, மதுரை ஐக்கிய கிறிஸ்தவ உயர் நிலைப்பள்ளியில் (யு. ஸி. ஹைஸ்கூல்) மாலை 3-மணிக்கு நடத்த முடிவுசெய்யப்பட்டுள்ளது என, அமைப்பாளர்கள் அறிவிக்கின்றனர்.

ஆல்பேனியா படைதிரட்டுகிறது

லண்டன், ஜூன் 19—

அல்பேனியா படைதிரட்டுகிறதென்றும் 17 வயது முதல் 60 வயது வரை உள்ளவர்கள் ராணுவ சேவைக்கு அழைக்கப்பட்டிருக்கிறார்கள் என்று வியன்னுவிலிருந்து கிடைத்துள்ள செய்திகள் கூறுகின்றன.

ரஷ்ய அதிகாரிகளே இப்படை திரட்டும் உத்திரவை பிறப்பித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

சோஷலிஸ்டு கட்சி மாநாடு

சோஷியலிஸ்ட் கட்சியின் எட்டாவது மாநாடு, சென்னை பீபிள்ஸ்பார்க் சர்க்கஸ் மைதானத்தில் ஜூலை 8-ந் தேதியிலிருந்து 12-ந் தேதிவரை நடைபெறும். மாநாட்டுக்கு தோழர் ஜி. சுப்மோஹரலி அவர்கள் தலைமை வகிப்பார். தோழர் ஜெ. பி. நாராயண் அவர்களும் மாநாட்டில் கலந்துகொள்ளக்கூடுமென தெரிகிறது.

ஸ்ட்ரெப்டோமைசின் மருந்து

அனுவசியமாக உபயோகிப்பதால் அபாயம்

க்ஷயரோக சிகிச்சைக்கு, ஸ்ட்ரெப்டோமைசின் மருந்து கையாளப்பட ஆரம்பித்ததிலிருந்து, பொதுமக்கள் இது, இந்த வியாதியைக் குணப்படுத்துவதற்கு எவ்வளவுக்குப் பயன்படக்கூடுமோ, அதைவிட எத்தனையோ மடங்கு அதிகமான அளவுக்கு அதற்கு முக்கியத்துவமளித்து அதை நாடி வருகிறார்கள். க்ஷயரோகத்தின் குறிப்பிட்ட சில பிரிவுகளுக்கு இந்த மருந்து சிறப்பாகக் குணமளிக்கும் என்று நிரூபிக்கப்பட்டிருப்பது உண்மையாகிலும், ஈரலையும் சுவாசக்குழாயையும் பாதிக்கும் க்ஷயரோகத்துக்கு சிகிச்சைசெய்வது விஷயத்தில் இந்த மருந்து எந்தமாதிரியான நோய் பிரிவுகளுக்குப் பயன்படக்கூடும் என்பது பற்றி தெளிவாக இன்னும் வரையறை செய்யப்படவில்லை. க்ஷயரோகம் சம்பந்தமாய் இந்த மருந்தைத் தாராளமாக தெரியாமலும், கவனக்குறைவாகவும் உபயோகித்தால், பின்னால் ஒரு கட்டத்தில் இம் மருந்தைக்கொண்டு சிகிச்சை செய்யவேண்டியதாக அமையும்போது, நோயாளிக்கு இம் மருந்து சரிப்பட்டு வராது என்ற நிலைமை உண்டாகிவிடும். மேலும், இம்மருந்து சட்டென்று காக்கும் நோயாளிகள் விஷயத்தில், இதனால் சில கெடுதல்கள் ஏற்பட்டிருப்பதும் தெரியவந்திருக்கிறது. இந்த விஷயங்களை எல்லாம் கவனிக்கும்போது, இந்த மருந்தை இன்னும் அபாயகரமானதாகவே கருதவேண்டுமென்பதோடு குறிப்பிட்ட சில ரகமான க்ஷயரோகங்களுக்குமட்டிலுமே அதை உபயோகிக்கவும் வேண்டும், அதுவும் இந்த சிகிச்சைமுறை பயன்தரக்கூடிய நோயாளிகள் யார் என்று தெரிந்து கண்டுபிடிப்பதில் ஆர்வமுள்ளவர்கள்தான் பிரயோகிக்க வேண்டும்.

பிரிட்டிஷ் வியாபாரம் பெருகுகிறது

நியூயார்க், ஜூன் 19—

பிரிட்டிஷ் வர்த்தக மந்திரி தோழர் ஆர்தர்பாடம்லி நியூயார்க்கில் செய்த பிரசங்கம் ஒன்றில், காமன்வெல்த் நாடுகளுடன் பிரிட்டனின் வர்த்தகம் அதிகரித்திருக்கிறதென்று கூறினார்.

கல்கத்தா பத்திரிகைப் பிரதிகள் பறிமுதல்

கல்கத்தாவிலிருந்து பிரசுரமாகும் 'பிரவாஸி' என்னும் வங்காளி பாஷைப் பத்திரிகையின் சித்திரை இதழின் பிரதிகள் அனைத்தையும், மேற்கு வங்க சர்க்கார் பறிமுதல் செய்துள்ளனர்.

மேற்படி இதழிலிருந்து மறுபிரசுரம் செய்வதையும், தடை விதித்திருக்கின்றனர்.

கோவை முத்தமிழ் மாமன்றக்காட்சி

[செந்தமிழன்பன்]

கோவையிலிருந்து ஒரு தம்பி வந்தான்
குந்தவைத்து என்ன அங்கு சேதி என்றேன்
போ அண்ணே! என்னத்தைநான் சொல்லப்போறேன்
புதுச ஓர் கூட்டமங்கே கூடினங்கோ!
முத்தமிழைக் காக்கஅந்த முயற்சி என்று
முழுவதுமே பேச்சாக இருக்கக் கண்டேன்!

நற்றமிழைக் கற்றஒரு 'நாவல்லராம்'
நடுநின்று 'போர்முரசு' கொட்டி நின்றார்
புதுமைதனை அள்ளிவீசும் 'புரட்சிக் கவியாம்'
புரியாத என்தனக்கும் புரிய வைத்தார்
'அஞ்சாத தளபதியாம்' 'அண்ணு' என்போர்
அடுக்குமொழி கேட்டங்கு அலுத்துப் போனேன்!

நெடுந்தமிழில் தளராமல் ஒருவர் பேச
நெடுஞ்செழியன் அவர்தானென் றன்று கண்டேன்
அவைதனிலே அழகாகப் பேசிடும் ஓர்
அவ்வைதுரை சாமியையும் கண்டு வந்தேன்
ஆரணங்கள் காணூர் கருத்தை வெள்ளை
வாரணரும் மிகவழகா யெடுத்துச் சொன்னார்!

அசைக்காத ஆராய்ச்சி உண்மை கண்ட
'அப்பா' துரைஎன்பாரை யறிந்து கொண்டேன்
பன்மொழியில் தமிழ்த்தேனை பரிந்து ஊட்டும்
அன்பழகன் அகமகிழ்ந்து பேசக் கண்டேன்
அப்பா! நான் கண்டதில்லை கேட்டதுண்டு
அவ்விடத்தில் அன்றுகண்ட காட்சிதனை!

எண்ணிலா செய்கைதனில் ஈடுபட்டு
எங்கோஎன் இனிபதமும் என்று ஏங்கும்
அண்ணல்தங்கோ எனபவரும் அங்கு வந்து
அரு தமிழில் வீரஉரை ஆற்றி நின்றார்
இன்னுமங்கே கூடினோர்கள் யாரென்றாலோ!
எப்படி நான் சொல்லுவது ஒன்றா! ரெண்டா!!

பகுத்தறிவு அவ்டத்தை மதுரத்தோடு
பக்குவமாய் குழைத்தெங்கும் கொடுக்கும் 'வள்ளல்'
தக்கபடி வள்ளுவரை அழைத்து வந்து
தமிழகத்தின் 'பொக்கிஷ' மீதென்று சொன்ன
கலைவாணர் கிருஷ்ணன் அங்கு காட்சிதந்த
கலைத்திறனை என்னென்று சொல்லப்போறேன்!

நாடகத்தின் மாசுதன்னைப் போக்க வந்த
நடிக ராமசாமியையும் நேரில் கண்டேன்
இத்தனையும் காண அங்கு வந்தவர்க்கு
இலவசமோ என்றாலங்கு அதோ இல்லை
கட்டணத்தில் நுழைந்த மக்கள் கூட்டம்
பட்டினத்தில் அப்பா! நான் கண்டதில்லை!

இத்தனை காட்சிகளைக் கண்ட பின்பும்
எப்படிநான் வீட்டிலேயே இருக்க நேரும்?
அன்றுமுதல் இன்றுவரை அங்கே கேட்ட
அரும்பணியை அப்படியே மேற்கொண்டேனே!
'என்வாழ்வும் என்னுயிரும் எங்கு சென்றும்
இன்தமிழில் இனிவாழும்' என்று சொன்னான்!

விவசாயம்

முப்பது லட்சம் ஏகராவில் ஆளிவிதை சாகுபடி

இந்தியாவில் 1949-50-ல் ஆளிவிதை சாகுபடி பற்றி, மத்திய விவசாய மந்திரி காரியாலய, பொருளாதார புள்ளிவிவர டைரெக்டரேட் தயாரித்துள்ள இரண்டாவது மதிப்பீட்டிலிருந்து, சென்ற ஆண்டு 31,25,000 ஏகராவில் சாகுபடி செய்யப்பட்டிருந்தவையில் இவ்வாண்டு மொத்தம் 30,88,000 ஏகராவிலேயே ஆளிவிதை சாகுபடி செய்யப்பட்டிருப்பதாகத் தெரிய வருகிறது. இந்த ஆண்டு சாகுபடி செய்யப்பட்டுள்ள நில விஸ்தீரணம் முந்திய ஆண்டைவிட 1·2 சதமானம் குறைவாகும்.

ஹிமாலயப் பிரதேசம், மைசூர், பெப்ஸு யூனியன், ராம்பூர் உ. பி. ஒரிஸ்ஸா ஆகியவற்றுடன் இணைக்கப்பட்டுள்ள சமஸ்தானப் பிரதேசங்கள் ஆகியவற்றிற்கான புள்ளி விவரங்களும், இப்பொழுது முதல் தடவையாக இந்த மதிப்பீட்டில் சேர்க்கப்பட்டுள்ளன. இந்தப் பிரதேசங்களில் ஆளிவிதை சாகுபடி செய்யப்பட்டுள்ள பிரதேசத்தின் மொத்த விஸ்தீரணம், சுமார் 32,000 ஏகரா ஆகும்.

இந்த மதிப்பீடு பொதுவாக, பிப்ரவரி இறுதி வரையுள்ள காலம்பற்றியதேயாகும். ஆனால், இந்தப் பயிர் சாகுபடி செய்யப்பட்டுள்ள பிரதேசத்தின் முழு அளவும் இந்தக் கணக்கில் சேரவில்லை. இறுதி மதிப்பீடு, இரண்டாவது மதிப்பீட்டைவிட சுமார் 22 சதவிகிதம் அதிகமாக இருக்குமென்று முந்திய அனுபவத்திலிருந்து தெரிகிறது.

மஹாராஷ்டிரத்தில் இந்த ஆண்டு அதிகப்படியான நிலத்தில் ஆளிவிதை பயிரிடப்பட்டிருப்பதாகத் தெரிகிறது. சென்ற ஆண்டு கவலையில்லை காரணமாக சாகுபடி குறைந்திருந்தது. மேற்கு வங்காளத்திலும், பருவநிலை அனுகூலமாக இருந்தது காரணமாக சாகுபடி இந்த ஆண்டு இந்தப் பயிர் சாகுபடி அதிகரித்திருக்கிறது. ஆனால் பீஹார், மத்திய பாரத், போபால், ராஜஸ்தான் ஆகிய இடங்களில், பருவநிலை சரியாக இல்லாதது காரணமாக, இந்த ஆண்டு சாகுபடி குறைந்திருப்பதாகத் தெரிகிறது.

★ நாட்டு நடப்பு ★

வருத்தம்

மேச்சேரிப்பேட்டை, ஜூன் 16

அண்ணாத்துரை நிலைய வாசகசாலை செயற்குழு உறுப்பினரும் சிறந்த தொண்டருமான தோழர் சேகரன் அவர்கள், சோழவந்தானில் நடந்த மதுரை மாவட்ட மாநாட்டிற்குச் சென்று வரும் போது ரயிலில் அடிபட்டு மலர்ந்த காலம்பட்டு இயற்கை எய்திவிட்டார். 14—6—50 மாலை தோழர்கள் மதுரை எம். முத்து, அய்யாசாமி, ராஜமன் மற்றும் இயக்கத் தோழர்களும் சென்று அடக்கம் செய்து வைத்தனர். அவரது குடும்பத்தாருக்கும், நண்பர்களுக்கும் அண்ணாத்துரை நிலைய வாசகசாலையின் சார்பாகவும் மதுரை நகர் கிழக்கு வட்டம் தி. மு. கழகத்தின் (கிளை) சார்பாகவும் ஆழ்ந்த அனுதாபத்தைத் தெரிவித்துக்கொள்கிறோம்.

மருத்துவகுல முன்னேற்ற சங்கம்

இராசபுரம், ஜூன் 8—

டை சங்கத்தின் சார்பில் 30-6-50 மாலை இராசபுரம் ஸ்ரீ...முதுசாமி ரெட்டியார் தோட்டத்தில் நடைபெற்றது. தோழர் டாக்டர் அனிசின்சாமி தலைமை வகித்தார். தம்மைய தோழர்கள் ஸ்ரீவாத்தினம் எம். பி. பல்லை நாடு ஆசிரியர் வ சேபசந்திரை: கே. இராமதாஸ் எம். பி. பி. ஏ. பாண்டியன். எம். பி. இரா. லிங்கராஜன் மற்றும் பலர் சொற்பொழிவாற்றினார்கள். தோழர் வ செவசந்திரன் பேசுகையில் பிற்பட்ட வகுப்பினரைச் சேர்ந்த மக்களுக்கு அளிக்கும் சர்க்கார் சலுகைகளை இக் குலத்துக்கும் அளிக்குமாறு கேட்டுக் கொண்டார். செயலாளர் மா. வரதம் பண்டிதர் நன்றிகூற கூட்டம் முடிவு அடைந்தது.

வள்ளுவர் மன்றம்

தஞ்சை, ஜூன் 14—

வள்ளுவர் பெயரில் ஒரு இலவசப் படிப்பகம் போலீஸ்தெருவில் 11-6-50 அன்று துவக்கப்பட்டது. அதுபோது புலவர் தோழர் வேலசம்பந்தமூர்த்தி அவர்கள் தலைமை வகித்தார். தோழர்கள் சேகரன் தரம், மா தநாராதி படிப்பகத்தின் முக்கியத்துவம்பற்றி பேசினார்கள். அமைப்புக் கூட்டத்தில் மன்றத்தின் நோக்கங்கள் வாசிக்கப்பட்டு ஒப்புக்கொள்ளப்பட்டன. பின்னர் மன்றத்திற்குக் கீழ்க்கண்ட செயற்குழு தேர்ந்தெடுக்கப்பட்டது.

தலைவர்:—புலவர் வேல் சம்பந்தமூர்த்தி; செயலாளர்கள்: ப. இராமச்சந்திரன், க. இராமலிங்கம்; பொருள் உறுப்பினர்:—கு. கிருஷ்ணன்; செயற்குழுவினர்:—கோவிந்தா, டி.டி. ராஜ், அய்யாத்துரை, கு. கோவிந்தராஜன், இரா. சோமசுந்தரம். தோழர் ப. இராமச்சந்திரன் நன்றிகூற விழா இனிது முடிந்தது.

பகுத்தறிவுப் படிப்பகம்

சாக்கோட்டை, ஜூன் 16—

வள்ளுவர் ஆண்டு வைகாசித் திங்கள் 31-ம் தேதி, மாணவர் பகுத்தறிவுப் படிப்பகம் ஒன்று தோழர் கோவை செழியன் அவர்களால் திறந்துவைக்கப்பட்டது.

அவ்வமயம் மாணவத் தோழர் மோகனதாசன் செயலாளராக ஏகமனதாகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். துணைசெயலாளராக தோழர் சி. வெ. ஆனந்தன், பொருளாளராக சா. சி. முத்து ஏகமனதாக தேர்ந்தெடுக்கப்பட்டனர். கூட்டத்தில் கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

1 வாரம் ஒருமுறை சொற்பயிற்சிக் கூட்டம் கூட்டுவது.

2 இயக்கப்பத்திரிகைகளைத் தருவிப்பது.

3 மாதம் பொதுக்கூட்டங்கள் நடத்தல், அவைகளுக்குப் படிப்பக உறுப்பினர்கள் ஒத்துழைக்க வேண்டியது.

பள்ளி திறப்புவிழா

உடையார்பாளையம், ஜூன் 17—

இடையக்குறிச்சி கிராமத்தில் இவ்வூர் பொதுமக்களால் ரூபாய் 10 000 செலவில் ஒரு பள்ளி கூடம் கட்டப்பட்டு, தோழர் செ. மா. இராஜா சிதம்பரம் அவர்களால் 5—6—50-ல் மிகவும் சிறப்பாக திறப்பு விழா செய்யப்பட்டது. தோழர் வே. இராமலிங்கம் அவர்களால் காந்தியடிகள் படமும், தோழர் வே. இரா. விசுவநாதன் அவர்களால் திருவள்ளுவர் படமும் திறந்து வைக்கப்பட்டது. புலவர் வை. சின்னப்பா அவர்கள் "பெற்றோரும் கல்வியும்" என்னும் பொருள் பற்றிப் பேசப்பட்டது. நன்றிகூற விழா இனிது நிறைவெய்தியது.

அலேரி ஊழியர் சங்கம்

சென்னை, ஜூன் 14—

13 6-50 மாலை சங்க மாடியில் தோழர் ஆர். கன்னியப்பர் தலைமையில் சங்கப் பொதுக் கூட்டம் நடைபெற்றது. தலைவரும் தலைமையுரையின், 10 6-50-ல் லேபர் ஆபீசருடன் மில்லில் நடைபெற்ற பேச்சுவார்த்தை விரிவாக எடுத்துப் பேசினார். பிறகு கே. கந்தசாமி, பி. கோவிந்தராஜுலு, பி. எம். மாணிக்கசாமி எம். பி இவர்கள் சங்கத்தில் தொழிலாளர்கள் நடந்துகொள்ளவேண்டிய முறைபற்றி பேசினர். பிறகு கீழ்க்கண்ட ஓர் தீர்மானம் நிறைவேறியது. வேலையிலிருந்து நீக்கப்பட்ட "ராமைய்யா ஜாலவு" திரும்ப வேலையில் வைக்க சங்கம் நடவடிக்கை எடுப்பதென்றும் முடிவு செய்யப்பட்டது.

1950-51 ஆண்டிற்கு செயலாளர் தேர்தல் நடைபெற்றது. செயலாளர் பி ஜி. குப்புசாமி நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

உலக சமாதான சங்கம்

வாணியம்பாடி, ஜூன் 16—

தோழர் சி. கோவிந்தராசன் தலைமையில் உலக சமாதான சங்கம் ஒன்று 15—6—50-ல் நிறுவப்பட்டு, அன்று மாலை ஓர் பொதுக் கூட்டம் நடைபெற்றது. அதுபோது தோழர்கள் டாக்டர் கிருஷ்ணமூர்த்தி, வி. என். தத்தப்பன், இராமனுஜன், சபூர்சாயபு ஆகியோர் அணுகுண்டு தடைசெய்ய வேண்டும் என்று விரிவாக சொற்பொழிவாற்றினார்கள். தோழர் இஞ்சிமூர்த்து நன்றிகூற கூட்டம் இனிது முடிவுற்றது.

சீர்திருத்த இளைஞர் மன்றம்

மேட்டுப்பாளையம், ஜூன் 17—

15—6—50 மாலை, இவ்வூர் சாந்தி மைதானத்தில் சீர்திருத்த இளைஞர் மன்றத்தின் சார்பாக, ஓர் பொதுக்கூட்டம் நடைபெற்றது அதுபோது கோவை, தோழர் கோ. சொ. சின்னதுரை அவர்கள் தலைமை வகித்தார். தோழர்கள் ஆ. ச. நடராசன், பி. பி. சித்ராகவியோர் சீர்திருத்தம் என்பது பற்றி சொற்பொழிவு ஆற்றினார்கள். செயலாளர் நன்றிகூற கூட்டம் முடிவுற்றது.

வ. உ. சி. ப. ஆண்டுவிழா

வ. உ. சிதம்பரனார் நினைவுப் படிப்பக மூன்றாவது ஆண்டுவிழா, தோழர் வ. உ. சி. ஆறுமுகம்பிள்ளை அவர்கள் தலைமையில் 10—6—5 சனிக்கிழமை அன்று நடைபெற்றது தலைமை வகித்துப் பேசியபின் பல பேச்சாளர்கள் சொற்பொழிவு நிகழ்த்த, விழா இனிதே முடிவுற்றது.

வள்ளுவர் படிப்பகம்

நரசிங்கபுரம்பட்டி, ஜூன் 16—

இப்படிப்பகத் திறப்புவிழா, 11—6—50 மாலை சிறப்புற நடைபெற்றது குடந்தை தோழர் எஸ். கே. சாமி உள்ளூர் தோழர்களும் சொற்பொழிவாற்றினர் இரவு 8 30 மணிக்குக் கூட்டம் இனிதே முடிவுற்றது.

வ. ஆ. மாவட்ட திராவிட முன்னேற்றக் கழக மாநாடு

ஆரணி

ஜுன் 24, 25 நாட்களில் ஆரணியில் நடைபெறவிருக்கும் மாநாட்டிற்கான பந்தல் வேலைகள், இரண்டுநாட்களுக்கு முன்னரே தொடங்கப்பெற்று நடைபெற்றுவருகின்றன. வரவேற்புத்தலைவர், செயலாளர்கள், பொருட்காப்பாளர், மாவட்டக்கழகப் பொதுச் செயலாளர் முதலியோர், மாநாடு அலுவல் குறித்து மாவட்டத்தின் பலபாகத்தும் சென்று, ஆரணி திரும்பிவிட்டனர். மாநாட்டு நிகழ்ச்சிகள் மாவட்டத்தில் உள்ள பல ஊர்களிலும் சினிமாக்களில் சிலேடுகள் மூலம் விளம்பரம் படுத்தப்பட்டு வருகின்றன. மாநாட்டில் காட்பாடி விவசாயப் பண்ணையாரின் கண்காட்சியும், பிறகண்காட்சிகளும், நிகழ ஏற்பாடுகள் நடைபெறுகின்றன மாநாட்டுத் தொண்டராய் இருந்து பணியாற்ற விரும்பும் தோழர்கள், தங்கள் முகவரிகளைத் தொண்டர் படைத் தலைவருக்கு அறிவித்துக் கொள்ளவும்.

வரவேற்புக்குழுவினர்.

இசை உதவியால் இரண சிகிச்சை

நியூயார்க், ஜூன் 19—

ஆபரேஷன் செய்யும்போது, நோயாளிக்குமட்டும் சங்கீதம் கேட்கும்படி செய்ய கிகாகோ சர்வகலாசாலை நிபுணர்கள் மூன்று ஆண்டிற்கு முன் ஏற்படுத்தியமுறை, இப்பொழுது வெற்றிகரமாக நடந்து வருகிறது. இந்த சங்கீதத்தினால், நோயாளியின் நரம்புகள் சமாதானமடைந்து, வலியைமறக்க உதவி செய்கிறதாம். அத்துடன், இச் சங்கீதம் ஆபரேஷன் செய்யும் டாக்டர்களுக்குக் கேட்காது.

ஆபரேஷன் செய்யப்படும் தினத்திற்கு முன்பு, நோயாளியிடம் எத்தகைய சங்கீதம் பிடிக்கும் என்று கேட்கப்படும். குழந்தைகளுக்கு, அவர்களுக்குப் பிடித்தமான தமாஷ் பாட்டுகள் வைக்கப்படும்.

இந்த முறை, இப்பொழுது புதிதாக கண்டுபிடிக்கப்பட்டதல்ல. சங்கீத மூலமே வியாதிகளைக் குணப்படுத்துமுறை ஏற்கனவே இருந்து வந்திருக்கிறது. —ஜுனோஸ்

ஆசிய முறை உடையே அழகானதாம்

லண்டன், ஜூன் 19—

லண்டனிலுள்ளவர்கள் ஆடை அணியும் முறையைவிட, ஆசிய நாட்டின் உடை அணியும் முறை மிக வசீகரமானதாகவும், சௌகரியமானதாகவும், அதிர்ச்சியைத் தாங்குவதாகவும் இருப்பதாக நேபாள மன்னரின் மருமகளும், சிறந்த அழகியுமான பேத்ராணி கூறினார். ராணி முன்பு லண்டன் வந்தபோது, மதக் கட்டுப்பாடு காரணமாக அதிகமாக லண்டன் வாசிகளுடன் பழகவில்லை. இத்தடவை அக் கட்டுப்பாடுகள் தளர்த்தப்பட்டுவிட்டதால், அவர் தாராளமாகஇப்போது எல்லாருடனும் பழகுகிறார்.

ஓநாய் வேட்டை

ஸ்டாக்ஹோம், ஜூன் 19—

வட ஸ்வீடனில் ஓநாய்களின் உபத்திரவம் பொறுக்க முடியவில்லை. ஏராள ரெயின்டீர் மான்களை அவைகள் கடித்துக் கொன்றுவிடுகின்றன. எல்லா ஓநாய்களையும் பிடித்துக் கொன்றுவிட ஸ்வீடிஷ் சர்க்கார் திட்டம் போட்டிருக்கின்றனர். ஒரு ஓநாயைப் பிடித்துக் கொடுத்தால், ரூ. 400 பரிசளிக்கப்படுமென அறிவிக்கப்பட்டிருக்கிறது.

பறக்கும் மோட்டார்



மண்ணிலே மோட்டார் வண்டியாகவும், விண்ணிலே விமானமாகவும் பயன்படக்கூடிய நவீன மோட்டார் ஒன்று அமெரிக்காவில் கண்டு பிடிக்கப்பட்டிருக்கிறது. இதன் பெயர் 'ஏரோகார்' எனப்படும். படத்தில் காணப்படும் ஏரோகார் பயணத்துக்கு தயாராக இருக்கிறது. வேண்டும்போது விண்ணிலும் பறக்கும் என்பதையும் படம் விளக்குகிறது.

தண்ணீர் குழாய்களை சுத்தம் செய்தல்

லண்டன், ஜூன் 19—

பூமிக்கடியில் அமைக்கப்படும் தண்ணீர் குழாய்கள், துரு ஏறுவதால் வீணாகி விடுகிறதென்றும், இவைகளை ரிப்பேர் செய்வதற்காக வருஷா வருஷம் பல லக்ஷ பவுன்கள் செலவிடப்படுகின்றனவென்றும் தெரியவருகிறது.

யுனைடெட் ஸ்டேட்ஸில் இந்தக் குழாய்களின் ரிப்பேர்களுக்காக, 250 000, 00 டாலர் செலவிடப்படுகிறதாம்.

இந்தத்துருவால், குழாய்கள் பழுதாவதைத் தடுத்து அவை அதிக காலம் உழைக்கும்படி செய்வதற்கான வழி பற்றி விஞ்ஞானிகள் ஆராய்ச்சி நடத்தி வருகின்றனர்.

'புக்போஸ்ட்' கட்டணம்

புதுடில்லி, ஜூன் 17—

உள்நாட்டு புக்போஸ்ட் தபால்களுக்கான கட்டணமே உள்ளூர் புக்போஸ்டுகளுக்கும் வசூலிக்கப்படுமென்றும் அதாவது முதல் 5 தோலாவரை 0-0-9-ம், அதற்குமேல் ஒவ்வொரு 2½ தோலாவுக்கும் 0-0-3வும் வசூலிக்கப்படுமென டல்லி போஸ்டு மாஸ்டர் ஜெனரல் அறிக்கையொன்று கூறுகிறது.

ஆஸ்பத்திரிக்குள் தற்கொலை

சென்னை, ஜூன் 19—

தண்டபாணி (வயது 36) என்பவரின் பிரேதம் இன்று காலை ஜெனரல் ஆஸ்பத்திரியில் ஹவஸ் வார்டுக்கெதிரேயுள்ள ஒரு மர மாடிப்படியிலிருந்து தொங்கிக்கொண்டிருந்தது.

தண்டபாணி, வயிற்று வலியால் கஷ்டப்பட்டுக்கொண்டிருந்ததாகவும், 2-ந் தேதி அன்று ஜெனரல் ஆஸ்பத்திரியில் சிகிச்சைக்குச் சேர்க்கப்பட்டதாகவும் கூறப்படுகிறது. பிரேதம் ஜெனரல் ஆஸ்பத்திரி சவக்கிடங்குக்கு அனுப்பப்பட்டுள்ளது.

ரப்பர் விலை குறைகிறது

ரப்பர் விலை அதிகமாவதை அமெரிக்கர் ஆட்சேபித்ததைக் கண்ட சீன வியாபாரிகள், ரப்பருக்கு அமெரிக்க மார்க்கெட் எங்கு இல்லாமல்போய் விடுமோ என்று பயந்து, தன்னிடமுள்ள ரப்பர் ஸ்டாக்கு களை எல்லாம் விற்க முன்வந்து விட்டனர். இதனால், ரப்பர் விலை மிகவும் குறைந்து விட்டது.

தாராபுரம் தொகுதியில்
30—6—50ல் நடைபெறும்
சென்னை சட்டசபை தேர்தலில்
ஜனராஜ்ய கட்சி அபேட்சகர்
திரு. S. ரத்னசாமி கவுண்டருக்கு
பச்சைப் பெட்டியில்
தயவுசெய்து ஓட்டுபோடவும்
(விளம்பரம்)

Printed & Published by T. M. Parthasarathy at the Mercantile Press, 2/45, Muthumari Chetty St, Madras-1.